# சிந்தனை செய் மனமே!



இளையவைகை

# சிந்தனைசெய் மனமே!

ஆசிரியர்

**இளையவைகை**

வெளியீடு

**ZERO PUBLICATIONS**

**ஜீரோ பப்ளிகேஷன்ஸ்**

N.M.G. ஹவுஸ், 19, வினாயகமூர்த்தி தெரு, சாத்தமங்கலம்,
மதுரை–625020. போன்: 9364404441
E-mail: zeropublications@gmail.com

## Chinthanai Sey Manamay Book Details


- *Author* : **ILAYAVAIGAI**
- *Pages* : *32*
- *20th Edition* : *December 2020*
- *Number of Copies* : *4000*
- *Total Number of Copies* : *1,54,000 Copies*

- *Type setting and Design by* :
  **SAFA Graphics**
  *Madurai - Ph: 9364414441*
  *e-mail: safagrafix@gmail.com*

- *Published by:*
  **ZERO Publications**
  *NMG House,*
  *19. Vinayagamoorthi St, Sathamangalam,*
  *Near Anna Bus Stand, Madurai. 625020. India.*
  *Ph: +91 9364414441*
  *e-mail: zeropublications@gmail.com*

*ஆசிரியர்*

**இளையவைகை**



© **ZERO PUBLICATIONS**
*All rights reserved. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without written permission from The Author.*

## சிந்தனைசெய் மனமே!

*குறைவற்ற செல்வமே நில்!*

*கொஞ்சம் நில்!*

*வாழ்க்கைப்படிகளில் விரைந்தேறாதே!*

*சற்று மெதுவாகச் செல்!*

*எதுவாயினும் சரியே, உனக்கு நலன் அளிக்கும் செயல்களில் விரைந்திடு! நலன் இல்லையேல் விரலையும் அசைக்காதே!*

*இவ்வுலகில் ஏதோ பிறந்துவிட்டோம். சில நாள்களே இங்கு வாழப் போகிறோம். இறந்தபின் மீண்டும் இங்கு வருவதோ, இங்குள்ள இன்பங்களை அடையப்போவதோ இல்லை. எனவே, தனக்கு நலமானதை மட்டும் செய்து வெற்றியடைந்த அமரர்கள் வரிசையில் அமரவேண்டும் என எண்ணுகிறாயா? அல்லது நமக்கு நாமே தலைவன்; நாம் நினைத்ததே சட்டம்; எதையும் ஏன் எதற்கெனக் கேட்பார் யாரிருக்கிறார்? எதையும், எங்கும், எப்படியும் செய்யலாம். நமக்கு அழிவே இல்லை என எண்ணி இறுமாந்திருக்கிறாயா?*

### உனக்காக

*மனிதா! நன்கு சிந்தனை செய்!*

*பிறப்பையும் இறப்பையும் உன்னால் மறுக்க முடியுமா?*

*நீ வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வைத்தான் உன்னால் மறுக்கமுடியுமா?*

*நீ யார்...?*

*மனிதனா...?*

*நீ இங்கே எப்படித் தோன்றினாய்?*

*இதற்கு முன் நீ எங்கிருந்தாய்?*

*நீ இங்கு தோன்றிய நோக்கமென்ன?*

*இனி நீ செல்ல வேண்டிய இடம் எது?*

*அங்கு உன் நிலை எப்படி இருக்கும்?*

*என்பன போன்ற வினாக்களை உன் இதயம் எழுப்பவில்லையா?*

*சில நேரங்களில் எழுப்பும்! ஆனால், விடைதான் உனக்குக் கிடைப்பதில்லை போலும்...*

*விடை கிடைக்க வேண்டுமெனில் வீட்டிலொரு மூலையைத் தேர்ந் தெடு! அங்கு அமர்ந்து அமைதியாய் சிந்தி! விடை பெறுவாய்! வெற்றியடைவாய்!*

*நீ காணும் உலகமென்பது என்ன?*

*உன் கண்களையும் மனதையும் மகிழச் செய்யும் பொருட்களை எண்ணிப் பார்?*

*தலையை உயர்த்து! வானத்தைப் பார்!*

*அதில் ஏதாவது பிளவைக் காண்கிறாயா?*

*அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது?*

*அப்படியே பார்வையை கீழ்நோக்கித் திருப்பு!*

*எவ்வளவு பொருட்களைச் சுமந்து சுழல்கிறது, பூமி!*

*அது எங்ஙனம் விரிக்கப்பட்டுள்ளது,*

*உனக்கு முன்னே பார்!*

*ஆம்! ஆங்காங்கே நெட்டை குட்டையாக மலைகள் உள்ளன.*

*இவை யாவும் எங்ஙனம் பிடிப்பாக நடப்பட்டுள்ளன என்பது உன் சிந்தனைக்கு எட்டவில்லையா?*

*சிந்திப்பாய் சிறப்படைவாய்!*

*உலகிற்கே ஒளி தரும் சூரியனும், நிலவும் ஒன்றையொன்று நெருங்கிக் கொள்ளவில்லை, நூலளவும் தடம் மாறாமல் அவை தம் வரையறைக்குள்ளே சீராகச் சுழல்கின்றன! அவற்றின் ஒத்துழைப் பின்றி மரம், செடி, கொடி போன்ற தாவரங்கள் யாவும் வளராது என்பதை நீ அறிவாய்! சில காலம் அவை மறைக்கப்பட்டால் உலகிலுள்ள பெரும் பான்மையான உயிரினங்கள் அழிந்துவிடும் என்பதையும் நீ அறிவாய்! அவற்றுக்குப் பதிலாக அவை போன்ற வற்றைப் படைக்கும் ஆற்றல் உனக்கு இருக்கிறதா!*

*கனி வகைகளையும், காய் வகைகளையும் இன்னும் மலர் வகை களையும் கொட்டித் தரும் தாவரங்கள் எவ்வளவு அற்புதமானவை, அவை எங்ஙனம் தோன்றியிருக்கும் என்பதைச் சிந்தித்தாயா?*

*இவையனைத்தும் முற்றிலும் அழிந்தொழிந்துவிடின் அவற்றை உருவாக்கும் திறன் உனக்கு உண்டா?*

*சிந்திப்பாய்!*

*உனக்கு மிகவும் அத்தியாவசியமானது நீர்!*

*அது இல்லாமல் உன்னால் சில நாள்கள் உயிர் வாழமுடியுமா?*

*நீர் இல்லையெனில் நீ மட்டுமல்ல உலகில் உள்ள உயிரினங்கள் பலவும் வாழமுடியாதே!*

*உன்னைத் தனியறையொன்றில் சில நாள்கள் அடைத்து வைத்து, தண்ணீர் கொடாமல் உன்னைத் தவிக்க விட்டப் பிறகு ஒரு குவளைத் தண்ணீரும் பெருஞ் செல்வமும் உன் முன் வைக்கப்பட்டு, “இவ் விரண்டில் ஏதாவது ஒன்று மட்டுமே உனக்குக் கொடுக்கப்படும். இதில் எது தேவை” என வினவினால் எதைத் தேர்ந்தெடுப்பாய்?*

*செல்வத்தைத் தானே?*

*ஓ... தண்ணீரையா!*

*ஆக, ஒரு குவளை தண்ணீரின் விலையை எவரும் நிர்ணயம் செய்யவே முடியாது. அவ்வளவு விலைமதிக்க முடியாத செல்வம் தான் தண்ணீர்; ஏற்றுக்கொண்டாயல்லவா? அது எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதை சிந்தித்ததுண்டா? சிந்திப்பின் சிதையமாட்டாய்!*

*காற்று!*

*நீ வாழ சுவாசிக்கிறாயே அக்காற்றை ஐந்து நிமிடங்களுக்கு மட்டும் நிறுத்தி விட்டால் உனக்கு என்ன நேரும் தெரியுமா?*

*பதில் கூறு! ஏன் மௌனமாய் இருக்கிறாய்?*

*காற்றே செல்லாத அறையொன்றில் உன்னை அடைத்து வைத்து, “கவலையற்றிரு மகனே!” எனக் கூறினால், என் சொத்துக்களை எல்லாம் கொடுத்து விடுகிறேன்; என் மனைவி, மக்கள் அனை வரையும் அடிமையாக்கி நானும் அடிமையாகிவிடுகிறேன்; என்னை இவ்வறையிலிருந்து வெளியேற்றுங்கள்” என்றல்லவா கூறுவாய்? ஒரு நிமிடம் காற்று இல்லையென்றால் உன் நிலை இவ்வளவு மோசமாகிவிடுகிறதே! அது நிரந்தரமாக நின்று விட்டால் உன் நிலை என்னவாகும்? அவ்வாறான காற்றை உருவாக்கியது யார் என்பது போன்ற சிந்தனையே உனக்கு வருவதில்லையா?*

*மனிதா! ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் அற்புதங்களை நினைத்துப் பார்!*

*உதிரம், சாணம், சிறுநீர் ஆகிய அசுத்தங்களுக்கிடையில் குடிப் போருக்கு மகிழ்வூட்டக் கூடிய சுத்தமாக சுவையான, சத்தான பாலை எவ்வாறு கால் நடைகள் பிரித்துக் கொடுக்கின்றன? இவை*

*போன்ற அற்புதப் படைப்பினங்கள் தோன்றியுள்ளனவே, எங்ஙனம்? சிந்தித்துணர்வாய்!*

## உனக்கு

*எங்கே விரைந்தோடுகிறாய் நண்பா?*

*சற்று நில்!*

*உன் விழியின் ஒளியை உன் கால் விரல்களிலிருந்து உச்சந்தலை வரை நன்றாகச் செலுத்து!*

*ஓ... தலையை எப்படிப் பார்ப்பதா?*

*அட, கண்ணாடியில் முகத்தைக் காண்பித்துப் பார்!*

*பார்த்துவிட்டாயா?*

*இரண்டு கால்கள் உள்ளனவே!*

*அவற்றை இயக்கிப் பார்!*

*எங்கெல்லாம் செல்கிறாய்?*

*இரண்டு கைகளையும் தொட்டுப் பார்! இயக்கிடு!*

*அவற்றைக் கொண்டு என்னவெல்லாம் செய்கிறாய்?*

*உன் நாவைப் பார்!*

*அது எவ்வளவு திறன் கொண்டதாக உள்ளது?*

*அது செயலிழந்து விட்டால்?*

*உன் மூக்கைப் பார்!*

*அது எவ்வளவு அருமையாகக் காற்றைச் சுவாசித்து நீ உயிர் வாழ்வதற்குத் துணை செய்கிறது!*

*உனக்கருளப்பட்டுள்ள செவி ஆச்சரியத்திற்குரியதாய் இல்லையா?*

*உன் விழிகள்!*

*ஆமாம்! விழித்துப் பார்!*

*என்னவெல்லாம் தெரிகின்றன?*

*அவை செயல்படுகிற விதம் வியப்பைத் தருகிறதல்லவா?*

*அவை செயலற்றுப் போய்விட்டால் உன் நிலை!?*

*உன் இதயம்....!*

*நீ உயிர் வாழ ஓயாமல் துடிக்கும் இயந்திரமல்லவா அது?*

*அது எவ்வாறு இயங்குகிறதெனச் சிந்தித்தாயா?*

*சீரானவன் சிந்திப்பான்; சிந்தித்தோன் சீரடைவான்! சீரடைவோன் சிறப்படைவான் என்பதை மனதில் வை!*

## *உன்னால் என்ன செய்ய முடியும்?*

*மனித ஆற்றல், அறிவுத்திறன், வல்லமை என்றெல்லாம் புகழ்கிறாயே! அவற்றை வைத்து உன்னால் என்னதான் செய்யமுடியும்?*

*உன்னால் ஒன்றுமே செய்ய இயலாது.*

*பொறு! பொறு! ஒன்றுமே செய்ய இயலாது என்றவுடன் கொதித்து விடாதே!*

*விண், விண்மீன்கள், மண் போன்றவற்றை உண்டாக்கும் திறன் உனக்குண்டா? உன்னால் முடியாதென்றால் உலகிலுள்ள அனைவரையும் உனக்குத் துணைக்கு அழைத்துக் கொள்!*

*ஆம்! அது உங்களில் யாருக்குமே எட்டாச் செயல்தான்.*

*பூமியில் வாழும் உயிரினங்களில் சில உருவத்தால் பெரிதாக உள்ளன. இன்னும் சில பலத்தால் உயர்ந்துள்ளன. பலமற்றதாகவும் சில உள்ளன.*

*நீ அற்பமாகக் கருதும் எறும்பு, கொசு போன்றவற்றில் ஏதாவது ஒன்றை உன்னால் படைக்கமுடியுமா?*

*அப்படி உன்னால் படைக்க முடியவில்லை என்றால் குறைந்த பட்சம் அவை இறந்துபோனால் அவற்றிற்கு உயிர் தரமுடியுமா?*

*ஆமாம்! நீ கூறுவதும் சரிதான். கொசு எறும்பு போன்றவை மனிதர்களுக்குத் தீங்கிழைக்கக் கூடியவையே. அவற்றை நீ படைக்கக் கூடாதுதான். ஆனால், செய்யவியலாததைச் செய்யத் தூண்டியதால் தானே இப்பதிலைக் கூறுகிறாய்?*

*சரி, உன் போக்கின்படியே போகலாம்.*

*உனக்குத் தீங்கிழைப்பவற்றை நீ வாழவிடலாமா?*

*கூடாதல்லவா?*

*ஒன்று செய் எங்குமே கொசு எறும்பு போன்றவை இல்லாமல் சுத்தமாக அழித்துவிடு!*

*அதுவும் முடியாதா?*

*அப்படியானால் உன்னால் என்னதான் செய்யமுடியும்?*

*உயிரினங்களின் ஜீன்களிலிருந்து மட்டுமே உன்னால் உருவாக்க இயலும். எதுவுமே இல்லாமல் உன்னால் ஒன்றைப் படைக்க முடியுமா?*

*மரம், செடி, கொடி போன்றவற்றை உன்னால் உருவாக்க இயலுமா?*

*நீ அற்பமாகக் கருதும் துரும்பு இருக்கிறதே, அதையாவது உன்னால் உண்டாக்க முடியுமா?*

*ஏன்? திருதிருவென விழிக்கிறாய்? “எல்லாமே தாமாகத் தோன்றின, என் அறிவாற்றலால் வந்தன” என்றெல்லாம் பிதற்றுகிறாயே, அவற்றை உருவாக்கிக் காண்பி பார்க்கலாம்.*

*உன் அறிவுத்திறனைத் தட்டி எழுப்பு!*

*ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் உணவான புல், தவிடு, பிண் ணாக்கு, தண்ணீர் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து, ஆட்டிப் பிழிந்து கால்நடைகள் தருவதைப் போன்ற பாலை உருவாக்கி விடுவாயா?*

*பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகவும், தெருத் தெருவாகவும் பாலுக்காக அலைந்து கால்நடைகளை ஏன் தேடுகிறாய்? பால் உற்பத்தித் தொழிற்சாலை என்ற பெயரில் ஓர் ஆலையைத் திறந்து, பாலைத் தயாரித்து, பால் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு அனுப்பி பயன்பெறலாம்தானே?*

*ம்... சாத்தியமே இல்லையா?*

*உலகிலுள்ள எப்பொருளையும் படைக்கவோ அழிக்கவோ உன்னால் இயலவில்லை!*

*நீ மானமுள்ள மனிதனல்லவா? எங்கே இதையாவது செய் பார்க்கலாம்.*

*ஒரு தாளில் ரொட்டித் துண்டை உன்னிடம் கொடுத்து இதை அழித்துவிடு எனக் கூறினால் அதை நீ அழித்துவிடுவாயா?*

*கையிலிருக்கும் தாளைத் தீயில் போட்டுக் கரித்துவிட்டு, ரொட்டியை வாயில் போட்டு சாப்பிட்டுவிட்டு அழித்து விட்டேன் என்பாயோ!*

*ஆமாம் உன்னால் வேறென்ன செய்யமுடியும்!*

*நன்றாகத் தெரிந்துகொள்!*

*எரிந்தது அழியவில்லை. சாம்பலாக மாறிவிட்டது.*

*நீ உண்டது என்னவாய் ஆகியிருக்குமென்பதைக் கூறவேண்டியதில்லை.*

*மனிதா! உனக்கு யாதொரு வல்லமையும் கிடையாது; எந்தப் பொருளையும் உன்னால் உருவாக்கவும் இயலவில்லை; அழிக்கவும் இயலவில்லை.*

*ஏன் உன்னையே நீ அழித்துக் கொள்ளவும் இயலாது! மரித்து விட்டால் மண்ணோடு கலந்து வேறு ஒரு வேதியியல் பொருளாக மாறிவிடுவாய். அழியமாட்டாய்!*

*இப்பொழுது சொல்! உன்னால் என்னதான் செய்யமுடியும்?*

*எழு... !*

*நேராக தேன் கூடு இருக்குமிடம் செல்!*

*கூட்டை நன்றாகப் பார்!*

*தேனைப் பற்றிய அற்புதங்களை நீ அறிவாயா?*

*தேன் என்னவென்று உனக்குத் தெரியுமா?*

*பல தாவரங்களின் மலர்களிலிருந்து உணவருந்திய தேனீ, தன் கூட்டையடைந்து, தன் வயிற்றிலிருந்து வெளியாக்கும் பல நிறங்களைக் கொண்ட திரவம்தான் தேன்! பல நோய்களுக்கு அதில் மருந்துண்டு. அதை நீ அருந்தி அதன் மருத்துவ குணங்களை அறிந்துகொள்!*

*தேனீக்களின் ரகசியத்தை நீ அறிவாயா?*

*தேன் கூட்டிற்குக் கீழே பார்!*

*சில ஈக்கள் உயிரற்றுக் கிடக்கின்றன. அவற்றிக்கு ஏன் இந்நிலை?*

*அவற்றைக் கொன்றது யார் என்ற வினா உன்னுள் எழுந்திருக்குமே?*

*தேனீக்கள் மலர்களிலிருந்து உணவருந்திவிட்டுத் திரும்பிய உடன், நல்ல தாவரங்களின் மலரிலிருந்து உணவருந்தி வந்த ஈக்களை ராணி ஈ தன் கூட்டுடன் சேர்த்துக் கொள்ளும். நச்சுப் பூக்களிலிருந்து உணவருந்தி வரும் ஈயைத் தன் வாயாலே வெட்டிக் கொன்றுவிடும்!*

*மரித்துக் கிடக்கும் ஈக்களை எடுத்துப் பார்! அதன் உடல்களில் காயத்தைக் காண்பாய்!*

*தேனீக்களை வழி நடத்துவதற்கென்று எப்படி ராணி ஈ ஒன்று இருந்து வழி நடத்துகிறதோ, அதே போலத்தான் இவ்வுலகை உனக்கப்பாற்பட்ட ஆற்றல் ஒன்று வழி நடத்திச் செல்கிறது. ஆக்கம், அழிவு போன்ற அனைத்தையும் செய்யக் கூடிய அந்த ஆற்றலே உன்னையும், உன் சாராரையும், உனக்குத் தேவையான அனைத்தையும் படைத்த மாபெரும் ஆற்றல்! அந்த ஆற்றல் இன்றி எதுவும் தானாக வந்ததில்லை.*

*இப்போது ஒன்று செய்!*

*நீ இந்நூலை எடுத்துக் கொண்டு ஒருவரிடம் சென்று, "பாருங்களேன்! நேற்று நான் வீட்டில் அமர்ந்திருந்தபோது இந்நூல் பூமியிலிருந்து அப்படியே எழுந்து மேலே வந்து விட்டது. எடுத்துப் பார்த்தேன். எதுவுமே எழுதப்படாமல் இருந்தது. சிறிது நேரத்தில் எழுத்துக்கள் பறந்து வந்து ஒட்டிக் கொண்டன. நானும் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தேன்" எனக் கூறினால் அவர் உன்னைப் "பைத்தியம்" என்றுதானே கூறுவார்? அல்லது வேறொருவர் உன்னிடம் அப்படிக் கூறினால் நீ அவரை பைத்தியம் என்றுதானே கூறுவாய்? ஒருபோதும் அவர் சொல்வதை நம்பமாட்டாய்தானே!*

*ஒரு சாதாரண நூலை உருவாக்குவதற்கே ஒரு மனிதனின் ஆற்றல் தேவையென்றால், உலகமும், அதில் அடங்கியுள்ள கருவூலங்களும், இன்னும் நீயும், உன்னில் அடங்கியுள்ள கருவூலங்களும் பெரும் ஆற்றல் ஒன்று இல்லாமல் எப்படி தானாக வந்திருக்கமுடியும்?*

*சற்று எண்ணிப்பார்.*

*ஏதாவது தானாக வருமா?*

*நீ காணும் யாவையும் படைத்த அந்த ஆற்றலை உன் கண்களால் காண முடியாது!*

*கண்கள் காணாததை நம்பமாட்டாய். அது உன் பழக்கம்தானே?*

*ஏன் உன் கண்களால் அதைக் காணமுடியவில்லை என்பதைச் சிந்திக்*

*காததும் உன் தவறுதானே!*

*நன்கு சிந்தனை செய்!*

*உனக்கு அறிவு உள்ளதா?*

*கோபம் கொள்ளாதே!*

*உன்னைச் சிறுமைப்படுத்துவதல்ல என் நோக்கம்.*

*என் கேள்விகளுக்கு பதில்களை மட்டும் கூறு!*

*உனக்கு அறிவு இருக்கிறதா?*

*இருக்கிறதென்கிறாயே அதை நீ பார்த்திருக்கிறாயா?*

*அறிவெனும் ஆற்றல் ஒன்று உண்டென்றால், அதை நீ ஏன் பார்க்கவில்லை?*

*சரி... உன்னால்தான் அதைப் பார்க்க முடியவில்லை. பிறரின் கண்களுக்காவது காண்பிக்க முடியுமா?*

இருக்கிறதென உறுதியாக நம்புகிறாயே? ஏன் காண்பிக்க மறுக்கிறாய்?

முடியாது! முடியவே முடியாது! அதைக் கண்களுக்கு காண்பிப்பது என்பது உன்னால் மட்டுமல்ல, உன்னைவிட தேர்ந்த யார் வந்தாலும் முடியாது!

ஆனால் வாள் முனையில் நீ நிறுத்தப்பட்டுக் கேட்கப்பட்டாலும் அறிவு எனும் ஆற்றல் ஒன்று உண்டு என்றுதான் வீரக்குரல் கொடுப்பாய்!

சாதாரண ஆற்றல்!

பிரிந்து செல்லும் உயிரைத் தடுத்து நிறுத்தும் வல்லமையற்ற ஆற்றல்!

எதையுமே படைக்கும் திறனற்ற ஆற்றல்!

குறைந்த அளவு சிறு துரும்பையேனும் அழிக்கும் ஆற்றலற்ற திறன்! இதையே உன் கண்களால் காணமுடியவில்லை என்றால் விண், வீண் மீன்கள், மண், மரம், செடி, கொடி, தானியங்கள், பழ வகைகள், காய் வகைகள், மலர் வகைகள், கால்நடைகள், பால், தேன், தண்ணீர் கடல் அதிலுள்ளவை... அப்பப்பா! எண்ணவே முடியாது. இப்படிப்பட்ட அதிசயமானவற்றைப் படைத்துப் பாதுகாத்துவரும் அப்பெரும் ஆற்றலை உன் கண்கள் எப்படிக் கண்டு கொள்ளும்?

பதில் கூறு!

ஆமாம்! ஒருபோதும் அதைக் கண்களால் காணவே முடியாது. ஆனால் இதயக் கண்கள் நிச்சயம் கண்டுகொள்ளும்!

நீ எழுதுவது, படிப்பது, பல சாதனைகளையும் சாகசங்களையும் செய்வது அறிவு இருப்பதற்கான அடையாளங்கள் தானே? இவை யாவும் ஒருவனிடம் இல்லையாயின் அவனை அறிவிலி என்றுதானே வருணிப்பாய்? சாதாரண இச்சிறிய செயல்களைச் செய்வதற்கு அறிவெனும் ஆற்றலின்றி முடியாது என்றால், உலகையும் அதில் உள்ளவை அனைத்தையும் படைத்துப் பாதுகாப்பதற்கு பெரும் திறன் ஒன்று இல்லையாயின் எப்படித்தான் அவை உருவாகி இருக்க முடியும்? உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் இருப்பதற்கான அடையாளங்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லையே.

## அந்த ஆற்றலின் பெயர் என்ன?

நீ செய்யும் செயல்களுக்குத் துணை புரியும் ஆற்றலுக்கு அறிவு எனப் பெயரிட்டு, அழைக்கிறாய். அதே போல உன்னால் செய்ய இயலாதவற்றைச் செய்யும் அப்பெரும் ஆற்றலுக்கு இறைவன், படைத்தவன் போன்ற பெயர்களைக் கொண்டு அழைக்கிறாய். எவ்வாறு அறிவெனும் ஆற்றலுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறாயோ அதைவிட அதிகமாக இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடந்தாக வேண்டும்.

இறைவன்! அவன் தனித்தவன். யாதொரு இணை, துணையற்றவன் இன்னும் அவன் யாதொரு தேவையுமற்றவன்.

அவனே ஏக இறைவன், படைப்பவன்; ஒழுங்குபடுத்தி உண்டாக்கு பவன்; உருவம் அமைப்பவன் அவனுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை யாவும் அவனையே துதிக் கின்றன. அவனே மிகைத்தவன் ஞானம் மிக்கவன். (திருக்குர்ஆன் 59:24)

‘அல்லாஹ்’ என்ற உடனே என்னடா இன்னுமொரு கடவுளா என அதிர்ந்துவிடாதே! நீ நினைப்பதுபோல ‘அல்லாஹ்’ என்பது மற்றுமொரு கடவுளின் பெயரல்ல; அல்லாஹ் எனும் அரபுச் சொல்லுக்கு ஏக இறைவன் என்று பொருள். அந்த இறைவன் அரபு நாட்டுக் கடவுள் அல்ல; மனித குலம் அனைத்திற்கும் பொதுவான ஒரே கடவுள். மனித இனமேம்பாட்டிற்கு அடிப்படை இதுதான். காட் (The God) என்றால் அது அமெரிக்கா அல்லது பிரிட்டன் கடவுள் என்பாயோ! இல்லை; இல்லை; தமிழ் மொழியில் கடவுள், இறைவன் என்பாய். ஆம் அது இறைவனைக் குறிக்கும் ஆங்கிலச் சொல். அதேபோல அல்லாஹ் என்பது இறைவனைக் குறிக்கும் அரபுச்சொல். இறைவன் அனைவருக்கும் பொதுவானவன். இப்போது உண்மையை விளங்கிக் கொண்டாயா?

## இறைவனை ஏன் வழிபட வேண்டும்?

உலகில் உன்னைப்போன்ற மனிதனிடம் சில நொடிகள் வாங்கி பயன்படுத்திவிட்டுத் திருப்பித் தரும் சாதாரணப் பொருட்களுக்கு எவ்வளவு மகிழ்வோடு நன்றி என்கிறாய்! உன் தாய் உன் மீது வைத்துள்ள அன்பை விட எழுபது மடங்கு அதிகமாக உன் மீது அன்பு பாராட்டி உனக்காக யாவற்றையும் படைத்துள்ளானே இறைவன்; அவனுக்கு நீ எவ்வளவு நன்றி செலுத்த வேண்டும் என்பதை ஒரு நிமிடம் எண்ணிப்பார்!

உன் பணிகளுக்காக அங்கும் இங்கும் விரைகிறாய்! உனக்கு மேலுள்ள அதிகாரிகளில் ஒருவரைக் கண்டுவிட்டால் கையை மேலே தூக்குகிறாய்! ஒரு நிமிடமும் தாமதம் கூடாதென தினமும் பணிக்கு விரைகிறாய்! உனக்கு மேலுள்ள அதிகாரிகளின் கட்டளை அனைத்தையும் செய்து முடிக்கிறாய்! உன் பணிகளுக்காக ஊதியம் பெறுகிறாய்!

ஐம்பது, நூறு என அச்சடிக்கப்பட்ட அற்பமான காகிதப் பணத் திற்காக உன்னையே நீ மறந்து உன்னைத் தாழ்த்திக் கொள்கிறாயே! உன்னையும், நீ உயிர் வாழ்வதற்கென எண்ணில் அடங்கா பல பொருட்களையும் படைத்தவன், நீ கேட்பதற்கு முன்பே இலவசமாக உனக்கு அளித்து உன் தேவை இனியும் என்ன கேளும், நான் தருகிறேன். மேலும், என்னிடம் மட்டுமே கேட்பவனை அன்பாகப் பார்க்கிறேன், அள்ளித் தருகிறேன். கேட்காதவனை வெறுக்கிறேன்; சபிக்கிறேன். கேட்பவனுக்கு அளிக்காததால் வெட்கமடைகிறேன். கேள் மனிதா! கேள்! என்னிடமே கேள்!'' எனக் கூறுகிற இறைவனுக்கு நீ என்ன செய்தாலும், எவ்வளவு நன்றி செலுத் தினாலும் அவன் அளித்துள்ள அருட்கொடைகளுக்கு நிகராகுமா?

நீ பணிபுரியும் துறையில் சில தவறுகள் ஏற்படும்போது அதற்கேற்ற தண்டனை உனக்கு அளிக்கப்படுகிறது. அற்பமான ஊதியத்திற்காக நீ செய்யும் பணியில் சில பிழைகள் நேர்ந்துவிட்டால் சில மாதங்கள் சம்பளவெட்டு, பணி நீக்கம், சிறை வைப்பு போன்ற தண்டனைகளை உனக்கு மேலுள்ள அதிகாரிகள் உனக்கு வழங்கு கிறார்களே! எல்லோருக்கும் அதிகாரியான இறைவனிடம் நீ பெற்றவற்றுக்கு முறையாக பணியாற்றவில்லையெனில் அவனுடைய தண்டனை உன்னை வந்தடையாதா?

இறைவனின் தண்டனையின்றி அவனுடைய அருள் மட்டும் உனக்கு வேண்டுமெனில் நீ இறைவனின் கட்டளைகளை ஏற்று நடப்பது அவசியமல்லவா?

## அதனால் என்ன பலன்?

இறைவனுக்கு அடிபணிவதால் நீ பெறவிருக்கும் பலன்களை இறைவேதம் குர்ஆன் கோடிட்டுக் காண்பிக்கிறது.

நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் புரிவோருக்கு, கீழே சதா ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகளைக் கொண்ட சுவர்க்கச் சோலைகள் நிச்சயமாக உள்ளன. (திருக்குர்ஆன் 2:25)

*தன் இரட்சகனின் முன்பாக நிற்பதை அஞ்சியவனுக்கு இரண்டு சோலைகள் உள்ளன. (திருக்குர்ஆன் 55:46)*

*அவ்விரண்டும் அடர்ந்த கிளைகளை உடையவை (திருக்குர்ஆன் 55:48)*

*அவ்விரண்டிலும், இரண்டு ஊற்றுகள் ஓடிக் கொண்டே இருக்கும். (திருக்குர்ஆன் 55:50)*

*அவ்விரண்டில் ஒவ்வொரு கனியிலும் இரட்டை வகைகள் உள்ளன. (திருக்குர்ஆன் 55:52)*

*அவர்கள் விரிப்புகளின் மீது சாய்ந்தவர்களாய் இருப்பார்கள். அவற்றின் உட்பகுதிகள் 'இஸ்தப்ரக்' என்னும் பட்டினால் உள்ளவை. மேலும், இரண்டு சோலைகளில் (பழங்கள் பறிப்பதற்கு) நெருங்கி யிருக்கும். (திருக்குர்ஆன் 55:54)*

*அவற்றில் கீழ்நோக்கிய பார்வையுடைய கன்னியர் உள்ளனர். அவர்களை இவர்களுக்கு முன்னர் எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை. (திருக்குர்ஆன் 55:56)*

*அவர்கள் வெண் முத்தைப் போலவும், பவளத்தைப் போன்றும் இருப்பார்கள். (திருக்குர்ஆன் 55:58)*

*நன்மைக்கு நன்மையைத் தவிர கூலி உண்டா? (திருக்குர்ஆன் 55:60)*

*தங்களின் இரட்சகனை மறுப்பவர்களுக்கு நரக வேதனையும் உண்டு; அது மிகக்கெட்ட மீளுமிடமாகும். (திருக்குர்ஆன் 67:6)*

*அதில் அவர்கள் போடப்படுவார்களாயின், அது கொதிக்கும் நிலையில் அருவருப்பான சப்தம் உண்டாவதைச் செவியுறுவர். (திருக்குர்ஆன் 67:7)*

*அது கோபத்தால் வெடித்து விடவும் நெருங்குகிறது. அதில் ஒவ்வொரு கூட்டமும் போடப்படும் போதெல்லாம் "(அச்சுறுத்தி) எச்சரிப்பவர் உங்களிடம் வரவில்லையா?" என அதன் காவலாளிகள் அவர்களைக் கேட்பார்கள். (திருக்குர்ஆன் 67:8)*

*"நாங்கள் செவியுற்றோ, சிந்தித்தோ இருந்தால், நரகவாசிகளில் இருக்க மாட்டோம்" என்றும் அவர்கள் கூறுவார்கள். (திருக்குர்ஆன் 67:10)*

*வினை விதைத்து விட்டுத் தினை அறுக்க முடியுமா நண்பா?*

*மரணத்திற்கு பின்பு உன் செயல்களுக்குத் தக்கவாறு உன்*

இறைவன் வழங்கும் மாபெரும் வெகுமதிகள் இவைதாம். உலகிலும் செயல்களுக்குத் தக்க சில வெகுமதிகள் கிடைத்து விடுகின்றன.

ஒன்றை உள்ளத்தில் ஊன்றிப் பதித்திடு. அதன்படி முழுமை யாய்ச் செயல்படு!

காரிருள் சூழ்ந்த நேரத்தில் வெளிச்சமற்ற சாலையில் நீயும் உன் நண்பனும் நடந்து சென்று கொண்டிருக்கும்போது.

“நண்பா! இருள் அதிகமாக உள்ளது: வழியில் கற்கள் தம் பற்களை நீட்டிக் கொண்டிருக்கலாம். காலைத் தரையில் இழுத்து நடக்காமல் தூக்கி வைத்தே நடந்து வா” என்ற நண்பனின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் தீங்கேதும் நேராது. அதற்கு மாறாக கற்கள் தன்பற்களை நீட்டி இருப்பதை என் கண்கள் காணவில்லையே எனக் கூறி, உன் விருப்பப்படி நடந்தால். சில நொடிகளில் கல்லில் இடிபட்டு பூமியை முத்தமிட்டுப் பல்லுடைபடுவாய் அல்லவா? ஏன்தான் உனக்கு இந்நிலையோ? நண்பனின் நல்லுபதேசத்தை ஏற்றிருந்தால், கல் இருந்தாலும் இல்லாமற் போனாலும் நலமே உனக்கு கிட்டியிருக்கும்.

சுவர்க்கமாவது, நரகமாவது? யார் சொன்னது? இவை எல்லாம் மூட நம்பிக்கை என்றா கூறுகிறாய்?

உன் கூற்றுப்படியே சுவர்க்கம் நரகம் எதுவும் மரணத்திற்குப் பின்பு கிடையாது என வைத்துக்கொள்வோம். நாளை அவை இல்லையாயின் தப்பிவிடலாம். உண்மையிலே அவை இருக்கு மாயின் நீ அதை பொய்ப்பித்ததின் விளைவாக உனக்குக் கொடுக் கப்படும் தண்டனையிலிருந்து உன்னைக் காப்பாற்றுவது யார்? அவற்றை மறுப்பதால் உலகிலாவது ஏதேனும் பயன்கள் உண்டா? அப்படியும் எதுவுமில்லையே!

ஆனால் அதை ஏற்றுக் கொள்வதனால் எவ்வித இழப்பும் கிடையாதே! அவை இருக்குமாயின் மெய்ப்பித்த பலனைப் பெற்றுவிடுவாயே! மரணத்திற்குப்பின் கிடைக்கும் சுவர்க்கம் நரகத்தைக்கூட விட்டுவிடு! உலகிலேயே அவற்றை ஏற்பதால் சுவர்க்கமும், ஏற்காததால் நரகமும் பெற்றுவிடுகிறாயே!

அதெப்படி? இதோ பார்!

உன் மண்டையை உடைத்து உதிரத்தை ஓடவிடு! வாளை எடுத்து உடலெங்கும் வெட்டிக்கொள்! உடலில் ஒரு புறம் ஈட்டியால் குத்தி மறுபுறம் எடுத்துக்கொள்! சாட்டையால் உடம்பெல்லாம்

*அடித்துக் கொள்! அக்கினியைக் ஏந்தி கைகளைச் சுட்டுக்கொள்! அக்கினியில் நடைபோடு! நடப்பதற்குப் பதிலாக உருண்டோடு. பாறாங்கல்லைச் சுமந்துசெல்! அப்போதுதான் நரகத்திலிருந்து தப்பி சுவர்க்கம் புகுவாய் என்றெல்லாம் கூறி உன்னை யாரும் அறிவிலியாக்க வில்லையே! இப்படிப்பட்ட துன்பங்களை எல்லாம் அனுபவித்தும் கூட சுவர்க்கம் கிடைக்கவில்லையே என வருந்துவதற்கு!*

*“மனிதா நீ மனிதானகவே இரு! மாறிவிடாதே! உதிரத்தைப் புசிக்காதே! உடலைக் கெடுக்காதே! தானாகச் செத்தவற்றை உண்ணாதே! வியாதியை உடலுக்கு உறவினனாக்காதே!*

*மதுவை அருந்தாதே! மண்டைக் குழம்பாதே!*

*கழிவறையில் பேசினால் கிருமிகள் வாயுள் புகும்; அதனாலும் உடல் நலம் போகும்! ஒன்றாக இருவர் அங்கு அமர்ந்து பேசினால் வெட்கம் விலகிவிடும்.*

*நின்று கொண்டு சிறுநீர் கழித்தால் சில துளிகள் நின்றுவிடும்; அதனாலும் சிறு நீரகத்தில் கல்லடைப்பு நோய் வந்துவிடும்!*

*உன் இச்சையை உம் மனைவியரிடம் தவிர பிறரிடம் தீர்க்காதே! தீரா நோயை வரவழைக்காதே!*

*உடல், உடை, இடம், உள்ளம் போன்றவற்றைத் எப்போதும் தூய்மையாக வைத்திடு!*

*மனிதனை மதித்திடு! மனிதநேயம் காத்திடு!*

*இவை யாவும் என் கட்டளைகள், செவியுற்றிடு! இதயத்தில் பதித்திடு! இதன்படி செயலாற்றிடு! என்றுதானே இறைவன் கூறுகிறான்.*

*இவைபோன்ற செயல்கள் உனக்கு நன்மை மட்டுமே பயக்கின்றன! அதோடு விடவில்லை. மேலும் எவ்வளவு உயர்வான வாழ்க்கை நெறி உனக்கு கற்பிக்கப்படுகிறது என்பதையும் பார்!*

*“ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து படைக்கப்பட்டவர்களே மனிதர்கள். இறைவனின் முன்னிலையில் அச்சமுடையோரைத் தவிர உங்களில் யாரும் யாரையும் விட சிறந்தவர் அல்லர். வல்ல இறைவனைத் தவிர யாரும் யாரையும் தரம் தாழ்த்த முடியாது.*

*இறைவனான என்னையே ஐவேளைத் தொழுதிடு! அதைக் கொண்டு மனதை ஒரு நிலைப்படுத்திடு! தொழுகையில் தோளோடு*

*தோள் சேர்த்து நின்றிடு! ஆண்டான், அடிமை, கருப்பன், சிவப்பன் என்ற வேற்றுமை இல்லை; இல்லவே இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திடு! அளவை நிறுவையில் மோசடி செய்யாது வாழ்க! பிறரின் பொருட்களை எவ்வகையிலும் சுரண்டாதே! உன் உழைப்பு தான் உன்னை உயர்த்தும். நியாயமான வழிகளில் உழைத்துச் செல்வங்களைச் சேர்த்திடுக! செல்வம் மிகுதியாக இருக்கும்போது நூற்றுக்கு இரண்டரை சதவீதமென ஜகாத் எனும் ஏழைவரி கொடு! உன்னுடைய சொத்தைத் தூய்மைப் படுத்திடு! உன் மனித சமுதாயத்தை உயர்த்திடு! ஆண்டிற்கு ஒருமுறை முப்பது நாள்கள் நோன்பை நோற்றிடு! உடல் நோயை அகற்றிடு!*

*“தாயின் காலடியில்தான் சுவர்க்கம் இருக்கிறது”*

*எனவே, பெற்றோரை மதித்திடு! கற்றோரை மதித்திடு! பெரியோரை மதித்திடு!*

*அண்டை வீட்டாரிடம் அன்போடு பழகிடு! குழந்தைகளிடம் அன்பு வைத்திடு!*

*நீ மட்டும் உண்டால் போதாது; இருப்பதை இல்லாதோர்க்குப் பங்கிட்டுக் கொடுத்திடு!*

*பொறாமை கொள்ளாதிருந்திடு! பெருமையை அடியோடழித்திடு!”*

*இவை இறைக் கட்டளைகள்! இறைவன் கூறுவது இதுதான்.*

*குர்ஆனில் உள்ளது இதுதான். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வலியுறுத்தியதும் இதுதான்.*

*இஸ்லாம் என்றவுடன் பிற மதங்களைப் போல் ஏதோ ஒரு மதமென எண்ணிக் கொள்ளாதே!*

*சாந்தியின் இல்லம் இஸ்லாம். கண்ணியத்தின் இல்லம் இஸ்லாம்.*

*சுருங்கச் சொன்னால்* Islam is a way of life *- இஸ்லாம் ஒரு வாழ்க்கை வழிகாட்டியாகும்.*

*மனிதனை வழிநடத்திச் செல்லும் சீரான வழியில் அவன் சென்று இறைவனின் சிறப்பான கட்டளைகளை ஏற்று நடப்பதால் ஒருவன் கெட்டுவிடுவான் என உன்னால் கூற முடியுமா?*

*ஆமாம், மனிதன் உயர்வடைவான் என்றால் அதை ஏற்று அதன் வழி செல்வது நல்லது தானே? அல்லது அதை மறுத்து வேறு வழியில் செல்வது நல்லதா?*

*நான் இதை உன் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.*

*இஸ்லாம் மார்க்கத்தில் யார் மீதும் எந்த நிர்ப்பந்தமில்லை. வழி கேட்டிலிருந்து நேர்வழி மிகத் தெளிவாகிவிட்டது. வழிகெடுப்ப வற்றை நிராகரித்து ஏக இறைவனை நம்பியவர் அறுந்துவிடாத பலமான கயிற்றையே பற்றிக் கொண்டார். (திருக்குர்ஆன் 2:256)*

*“இச்சத்தியநெறி உங்கள் இரட்சகனிடமிருந்து வந்துள்ளது” எனவே, விரும்புபவர் நம்பட்டும். விரும்பாதவர் மறுக்கட்டும்” எனக் கூறுங்கள்.*

*அக்கிரமக்காரர்களுக்கு நெருப்பை நிச்சயமாக ஆயத்தப்படுத்தி உள்ளோம். அதன் சுவர் அவர்களைச் சூழ்ந்துள்ளது. அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரால் இரட்சிக்கப்படுவார்கள். அது முகங்களை சுட்டுப் பொசுக்கிவிடும். அது மிகக்கேடான பானமாகும்! இறங்கும் தளத்தில் அது மிகக் கெட்டதும் ஆகும். (திருக்குர்ஆன் 18:29)*

*ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்! பிற மதங்களைப் போல இஸ்லாம் கூறியவற்றைக் கூற்றோடு விட்டுவிடாது சொன்னதைச் செய்வதும் செய்யச் சாத்தியமுள்ளதைச் சொல்வதும்தான் இஸ்லாம்!*

*நண்பர் ஒருவர் எம்.எஸ்.சி பி.ஹெச்.டீ பட்டதாரி. கற்கும் காலத்தில் மாணவர் சங்கத் தலைவர். சில நாடுகளில் சுற்றுப் பயணம் மேற் கொண்டவர். மனித ஒற்றுமை, சமத்துவம், நியாயம் போன்ற வற்றிற்கு உயிர் கொடுக்கத் துடித்தவர் பொதுவுடைமை இயக்கத்தில் முக்கியமானவர்களில் ஒருவர். ஆனால் சாதியால் தாழ்த்தப் பட்டவர். ஒருநாள் அவர் தம் தோழமை இயக்கத்தில் தமக்கு மேல் பதவியில் இருந்த தோழர் ஒருவரின் இல்லம் சென்று பேசிக் கொண்டிருக்கையில்,*

*“தோழர் அவர்களே! நான் தங்களின் மகளை மணமுடிக்க விரும்புகிறன்” எனக் கூறியிருக்கிறார். இதைக் கேட்டவுடன், தோழமை இயக்கத்தின் பதவில் இருந்தவர்.*

*“எழுடா நாயே! முதலில் வெளியே போ” எனக் கடுமையான வார்த்தைகளால் பதிலுரைத்திருக்கிறார். இதைச் செவியுற்ற அவர் அவசரப்படாமல்,*

*“ஏன் தோழரே இவ்வளவு கோபம்” என வினவ,*

*“ஏண்டா! நான் என்ன சாதி? நீ என்ன சாதி? எனக் கேள்வி எழுப்பி இருக்கிறார் அவர்*

*அவர் அப்போதும் நிதானமாக!*

“தோழர் அவர்களே! நீங்கள்தானே பல மேடைகளில் நாம் எல்லோரும் தோழர்களே! சகோதரர்களே! நம்மில் எவ்வித வேற்றுமையுமில்லை. சாதி இல்லை, மதமில்லை. மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள்' என்றெல்லாம் பேசியுள்ளீர்கள். இன்று ஏன் இவ்வளவு ஆவேசப் படுகிறீர்கள்?” எனக் கேட்டிருக்கிறார்.

“டேய் அதெல்லாம் நாட்டிற்கு மட்டும்தான்! வீட்டிற்கு அல்ல. இதை என்ன குடும்பம் என நினைத்தாயா இல்லை...'' எனக் கடுமையாகப் பேசினார்.

தோழமை அன்பில் துவண்டுபோன அவர் அங்கிருந்து வெளி யேறினார்.

மனிதா! தோழமை இயக்கங்களின் கொள்கைப்பிடிப்பைப் பார்த்தாயா?

சொல் ஒன்று செயல் ஒன்று.

உதட்டில் ஒன்று! உள்ளத்தில் ஒன்று.

இப்படிப்பட்ட பசுத்தோல் போர்த்திய விலங்குகளின் பின்னே சென்றுவிடாதே! மனிதனை மனிதனாக மதிக்கும் இஸ்லாமிய மார்க்கமே உன் வெற்றிக்கும் மேன்மைக்கும் வழிவகுக்கும். நீ ஏன் இந்த வழியில் வரக்கூடாது? படைத்துவனுக்கு மட்டுமே பணிந்து, படைப்பினங்களுக்குப் பயன்பட்டு ஏன் வாழக் கூடாது?

இந்த வழி மட்டும்தான் தன்மானத்துடன் உன்னை உலக அரங்கில் உயர்ந்து நிற்கச் செய்யும்!

தமிழகத்தில் காணப்படும் மஸ்ஜிதுகள் எனும் இறைஇல்லங் களுக்குச் சென்று பார்! முதல் வரிசை உயர் சாதியினருக்கு, இரண்டாவது வரிசை அதற்கடுத்த சாதியினருக்கு, மூன்றாவது வரிசை இடைப்பட்ட சாதியினருக்கு, கடைசி வரிசை தாழ்ந்த சாதியினருக்கு என்றும் ஒதுக்கப்பட்டு இருக்கின்றனவா?

நீ எந்த சாதியாக இருந்தாலும் ஆண், பெண் உறவில் வெளிப்பட்ட அற்பமான விந்திலிருந்துதானே பிறந்தாய். யாராவது தங்கத் திலிருந்து பிறந்துள்ளாரா? பிறப்பால், குலத்தால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற மடமையான கூச்சலை இஸ்லாம் குழி தோண்டிப் புதைத்துவிட்டது.

நீ மக்கா அல்லது மதீனா சென்றுபார்! இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் குடும்பத்தாராக இருந்தாலும் சரி, தாமதமாக

*வந்தால் அவரும் பின் வரிசையிலேதான் அமர வேண்டும். முன்னுரிமை கோரி எவரும் முந்தமுடியாது.*

*மனிதன் சக மனிதனை மனிதனாக மட்டுமே பார்க்க வேண்டும். மனிதன் என்ற அடிப்படையில் யாரும் யாரையும் விட உயர்ந்தோ தாழ்ந்தோ இருக்க முடியாது. இது மடமை என்கிறது இஸ்லாம்.*

*மனிதநேயம், ஒழுக்கம், கண்ணியம், இறையச்சம் மிக்கவர்களே சிறந்தவர்கள்! என்ற கொள்கையில் நிற்கிறது இஸ்லாம்.*

## *குர்ஆன் இறைவேதமா?*

*திருக்குர்ஆன் ஏதோ முஸ்லிம்கள் மட்டுமே படிக்கும் புத்தகம் போலும் என்று எண்ணுகிறாயா? இப்போதுதான் நீ பெரும் தவறு செய்கிறாய்.*

*ஆமாம்! குர்ஆன் ஒன்றும் முஸ்லிம்களின் குடும்பச் சொத்து அல்ல. அது பிரபஞ்சத்திலுள்ள அனைவருக்கும் பொதுவானது. அனைவருக்கும் அறிவுரை வழங்கக் கூடியது. அது தன்னைப் பற்றிக் கூறுவதைப் பார்.*

*இது (குர்ஆன்) அகிலத்தார் அனைவருக்கும் நல்லுபதேசமே தவிர வேறில்லை. (திருக்குர்ஆன் 68:52)*

*ஆம்! குர்ஆன் உண்மையில் இறைவனால் அருளப்பட்ட நிறைவான வேதம்தான். அதற்குச் சாட்சியாக அந்த குர்ஆனே அமைந்துள்ளது.*

*அட! நீதான் நடுநிலையான நியாயமான மனிதனாச்சே! திருக் குர்ஆன் அப்படி என்னதான் சொல்கிறது என்பதை ஒருமுறை படித்துப் பார்த்தால் என்ன? பொதுவாகவே புத்தகம் படித்தால் உன் கல்வி அறிவு பெருகும் அல்லவா?*

*இது (இறை)வேதம்; இதில் சந்தேகமே இல்லை... (திருக்குர்ஆன் 2:2)*

*ஆதாரங்களையும் குர்ஆனே அள்ளித்தருகிறது!*

*முஹம்மத் பொய்யாக கற்பனை செய்து குர்ஆனைக் அமைத் திருக்கலாம் என சந்தேகம் வருகிறதா?*

*உன் ஐயம் உண்மையாக இருக்குமானால் உலகத்தில் உள்ள எல்லோரையும் உன் உதவிக்கு அழைத்துக்கொள்! மனித வாழ்க்கைக்குத் தேவையான சட்டம் ஒன்றைக் கொண்டுவா! அது மனித வாழ்க்கையில் ஏற்படுட்ம பிரச்னைகளுக்கு முழுமை யான தீர்வைத் தரவேண்டும். குர்ஆனில் உள்ள சட்டங்கள் மனித*

*வாழ்வில் ஏற்படும் பிரச்னைகளுக்கு முழுமையான தீர்வைத் தருவதாகத்தான் அமைந்துள்ளன. இதை குர்ஆன் சவாலாக கேட்கிறது. (திருக்குர்ஆன் 11:13)*

*குர்ஆன் இறைவேதமன்று; முஹம்மத்(ஸல்) அவர்களால் கற்பனை செய்யப்பட்டதெனக் கூறுகிறாயா, இதோ குர்ஆன் வெளிப் படையாகவே சவால் விடுகிறதே!*

*குர்ஆன் முஹம்மத் அவர்களால் இயற்றப்பட்டது என்று நீங்கள் கூறுவது உண்மையானால், அவர் போன்று நீங்களும் மனிதர்களே; உங்களால் இந்த குர்ஆன் போன்று இயற்ற முடியுமா? முடியா தென்றால் குர்ஆன் முஹம்மதால் இயற்றப்பட்டதல்ல என்பதும் அது இறைவனால் அருளப்பட்டது என்பதும் உறுதியாகிறது. குர்ஆனைப் போன்றே நூற்றிப் பதினான்கு அத்தியாயங்களை இயற்றிக்கொண்டு வரவேண்டும் எனக் கூறவில்லையே? பத்தேபத்து அத்தியாயங்களைக் கொண்டு வந்தாலே போதும் என்றுதானே கூறுகிறது. அவ்வாறு உன்னால் இயற்ற இயலவில்லையாயின் குறைந்தது ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வர இயலுமா என்றும் கேட்கிறது.*

*நம் அடியாருக்கு நாம் அருளியுள்ளதை (திருக்குர்ஆனை) நீங்கள் ஐயப் பட்டு, (அதில்) உண்மையாளர்களாகவும் இருந்தால், ஏக இறைவனைத் தவிர உங்களின் உதவியாளர்கள் அனைவரையும் அழைத்து இதுபோல ஓர் அத்தியாயமேனும் கொண்டு வாருங்கள். (திருக்குர்ஆன் 2:23)*

*வரலாற்று ஏடுகளைப் புரட்டிப்பார்! பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அரபு நாட்டில் இருந்த அளவிற்குப் பண்டிதர்களும், கவிஞர்களும் அப்போதும் சரி! இப்போதும் சரி எங்குமே இருந்ததில்லை. ஒவ்வொருவரும் கவிதைகளை இயற்றி தங்களின் மார்பைத் தட்டிக் கொண்டு பெருமையடித்துக் கொள்வார்கள். ஆயினும் யாராலும் குர்ஆனின் இவ்வினாவுக்குப் பதில் கொடுக்க இயலவில்லை.*

*நன்கு தெரிந்து கொள்! இதுவரையில் எவரும் குர்ஆனிற்கு நிகராக ஒரு வசனங்கூட இயற்றிக் கொண்டு வந்ததாகச் சரித்திரமே இல்லை. இனி மேலும் யாராலும் கொண்டு வரவே இயலாது.*

*நாற்பது, ஐம்பது பக்கங்களைக் கொண்ட ஓர் அத்தியாயத்தை உன்னை இயற்றச் சொல்லவில்லை. இரண்டு மூன்று வரிகளைக் கொண்ட ஒரு வசனத்தைக் கூட உன்னால் இயற்ற முடியாது. நீ*

உலகனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டு முயன்றாலும் தோல்வியையே தழுவுவாய்! அதைத்தான் குர்ஆனும் கூறுகிறது.

இந்தக் குர்ஆனைப் போல ஒன்றைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும், ஜின்களும் ஒன்றிணைந்து (முயன்று) அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுவோராய் இருப்பினும் இதுபோன்ற ஒன்றை அவர்களால் கொண்டுவர இயலாது எனக் கூறும்! (திருக்குர்ஆன் 17:88)

குர்ஆன் முஹம்மத்(ஸல்) அவர்களின் கவியுமன்று; கற்பனையுமன்று. எழுத்தறிவு, படிப்பறிவு எதுவுமே இல்லாத அவர்களால் இலக்கிய நடையில் ஏராளமான அறிவுரைகளையும், ஓர் அரசாங்கத்தையும் நாட்டையும் நிர்வகிப்பதற்கான சட்டங்களையும் உள்ளடக்கிய ஓர் நூலை இயற்ற இயலுமா? அப்படியே முடியுமென்றால் கவியரசர்கள், கல்வியரசர்களால் அதையும் விடச் சிறந்த ஒன்றைக் உருவாக்க இயலும் தானே? அல்லது குறைந்தபட்சம் அதைப் போன்ற ஒன்றையாவது உருவாக்க முடியுமல்லவா? அப்படி யாருமே அதற்கு இணையாக ஒன்றைக் கொண்டு வரமுடியவில்லையே! அது ஏன்?

மக்கா நகர மக்களனைவரும் நபியவர்களிடம் வந்து, "இதை மாற்றி இதுவல்லாது வேறொரு குர்ஆனைக் கொண்டு வாருங்கள். நாங்கள் எல்லோரும் தங்களை நபியென ஏற்கிறோம்" என்றார்கள். அப்படி அது அவர்களின் கற்பனைக் கவியாக இருந்திருந்தால் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும் சாதகமாக மாற்றிக் கொண்டிருப்பார்களே? ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லையே, ஏன்?

மனிதா! இதோ பார் இறைவேதம் குர்ஆனில் இறைவன் அதைக் சொல்லிக் காண்பிக்கிறான்.

தெளிவான நம் வசனங்கள் அவர்களிடம் ஓதிக் காண்பிக்கப்பட்டால், நம் சந்திப்பை எதிர்பார்க்காதவர்கள், இதுவல்லாத வேறு குர்ஆனைக் கொண்டுவாரும்! அல்லது இதை மாற்றி விடும்!" எனக் கூறுகிறார்கள். "என் மன விருப்பப்படி அதை மாற்றிவிட எனக்கு அதிகாரமில்லை; எனக்கு இறைச்செய்தியாக அறிவிக்கப் படுபவற்றைத் தவிர வேறெதையும் நான் பின்பற்றுவதில்லை. என் இரட்சகனுக்கு நான் மாறுசெய்தால், மகத்தான நாளின் தண்டனையை அஞ்சுகிறேன்" என (தூதரே) கூறும்! (திருக்குர்ஆன் 10:150)

குர்ஆனின் வசனங்களை அவர்கள் தம் விருப்பப்படி மாற்றும்

அதிகாரம் இல்லாத முஹம்மத் அதை எப்படி கற்பனையில் உருவாக்கி இருப்பார்கள்? எனச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பரப்பி வந்த ஓர் இறைக் கொள் கையை எதிர்த்தவர்களும், அதனை அழித்தொழிக்க முயன்றவர் களும் யார் தெரியுமா? குலப்பெருமை கொண்டவர்கள், ஆதிக்கமும், கர்வமும் உடையவர்கள், பெண்களை இழிவு படுத்தி வந்தவர்கள், மனிதர்களை அடிமைகளாக்கி கொடுமைப்படுத்திய வர்கள், தாம் பெற்றெடுத்த பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தவர்கள், கொலை வெறியர்கள்.

ஆனால் இப்படிப்பட்டவர்களும் இறுதியில் இறைவனுக்குப் பணிந்து இன்றைய தினம் முஸ்லிம்களாக வாழ்கிறார்கள். நீ என்ன அவர்களைப் போன்ற கொடியவனா? அவர்களைப் போன்று இதயம் அற்றவனா? சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் உனக்கு இருக்கிறது. அதை தாமதப்படுத்தி வீணடித்துவிடாதே! இன்று முதல் ஆய்வில் முழு மூச்சாய் ஈடுபடு! சத்தியம் எதுவோ அதை நீ ஏற்றுக்கொள்!

நண்பா! நீ குர்ஆனைப் படித்துப் பார்! இன்றைய உலகம் வியந்து கொண்டிருக்கும் விஞ்ஞானத்தின் தூண்டுகோலாக குர்ஆன் இருப்பதை நீ காண்பாய்! இதோ உதாரணத்திற்கு சில வசனங்களை மட்டும் பார்.

“மனித, ஜின் இனமே! வானங்கள், பூமி ஆகியவற்றின் எல்லை களைக் கடந்து செல்ல முடிந்தால், செல்லுங்கள்! (அதற்குரிய) ஓர் ஆற்றலுடன் தவிர செல்லமாட்டீர்கள். (திருக்குர்ஆன் 55:33)

இரண்டு கடல்களையும் ஒன்றோடொன்று அவனே சந்திக்கச் செய்தான். அவை இரண்டிற்கும் இடையே ஒரு தடுப்பும் இருக்கிறது. அதை அவை மீறாது. (திருக்குர்ஆன் 55:19,20)

(உருண்டையாக உள்ள பூமியை இரண்டாகப் பிரிக்கும்போது காணப் படும்) இரண்டு கிழக்கு மற்றும் இரண்டு மேற்கு திசைகளுக்கும் அவனே இறைவன். (திருக்குர்ஆன் 55:17)

உங்களுக்காக இப்பூமியை விரிப்பாக அவனே அமைத்தான். இன்னும், அதில் உங்களுக்குப் பாதைகளை எளிதாக்கினான். மேலும், வானத்திலிருந்து நீரையும் இறக்கினான். “அதன் மூலம் பல்வேறு தாவர வர்க்கங்களை ஜோடிஜோடியாக வெளிப் படுத்துகிறோம். (திருக்குர்ஆன் 20:53)

நண்பா இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பின்படி தாவரங்களில் ஆண் பெண் என இரண்டு வகைகள் இருப்பதை நீ அறிவாய் அல்லவா? இதை திருக்குர்ஆன் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளதே பார்த்தாயா!

உனக்கு பல பணிகள் இருக்கலாம் எனவே இத்தோடு இதை நிறுத்திக் கொள்கிறேன். இன்னும் ஏராளமான வசனங்கள் இது போன்று குர்ஆனில் காணப்படுகின்றன. தமிழாக்கம் செய்யப் பட்டுள்ள குர்ஆனை நீ படித்துப்பார்.

## குர்ஆனின் தன்மைகள்!

இறைவனிடமிருந்து அல்லாது மனிதனிடமிருந்து குர்ஆன் அருளப்பட்டிருந்தல் குர்ஆனில் ஏராளமான முரண்பாடுகளைக் காணமுடியும். ஆனால் முரண்பாடுகளில்லை.

இந்தக் குர்ஆனை அவர்கள் சிந்திக்க வேண்டாமா? இறைவன் அல்லாதவரிடமிருந்து வந்திருப்பின், இதில் ஏராளமான முரண் பாடுகளைக் கண்டிருப்பார்கள். (திருக்குர்ஆன் 4:82)

மனிதர்களுக்காக ஒவ்வோர் உதாரணத்தையும் நிச்சயமாக இந்தக் குர்ஆனில் விவரித்துள்ளோம். எனினும், அதிகமான மக்கள் இறைமறுப்பைத் தவிர (எதையும்) ஏற்பதில்லை. (திருக்குர்ஆன் 17:89)

மனிதா! குர்ஆனில் முரண்பாடு எதுவும் இல்லை என்பதை அறிய வேண்டுமாயின், அதை நீ அவசியம் படித்தாக வேண்டும். நீ உண்மையில் தெளிவானவன் என்றால் பகவத் கீதை, பைபிள், குர்ஆன் உள்ளிட்ட அனைத்தையும் படித்து அறிந்து, உண்மையில் எது இறைவேதம் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு அதன் வழியில் நடக்க வேண்டும்.

சாதி, சம்பிரதாயம், மதம், பாரம்பரியம் ஆகியவற்றை மீற முடியாது என்ற கோழைத்தனமான வசனங்கள் பேசாதே! சத்தியத்தைத் தேடு; அதற்காக முழு மூச்சுடன் ஈடுபடு!

விஞ்ஞானம், மருத்துவம், வானவியல், பொருளாதாரம், அரசியல் அமைப்புச் சட்டங்கள், சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள், உதாரணங்கள், வரலாற்று உண்மைகள் இன்னும் கடல் பற்றி அதிசயங்கள் உள்ளிட்ட, மனிதனை வியக்க வைக்கும் கருத்துக் கருவூலமாகக் குர்ஆன் திகழ்கிறது.

*மனிதா! அதை நீ ஒருமுறை படித்துப்பார்! படித்தவற்றை உன் நினைவில் நிறுத்தி சிந்தித்துப்பார்!*

*மனிதர்களுக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் குர்ஆனில் உண்டு. எதுவுமே இல்லாமலில்லை. அப்படிப்பட்ட,*

*அதனிடம், அதற்கு முன்னிருந்தோ அதற்குப் பின்னிருந்தோ அசத்தியம் எதுவும் நெருங்காது. (இது) புகழுக்குரிய ஞானம் மிக்கவனிடமிருந்து இறங்கியுள்ளது. (திருக்குர்ஆன் 41:42)*

*சகலமும் உண்டு. ஆனால் உண்மைக்குப் புறம்பாக எதுவுமே இல்லை. இதுதான் குர்ஆனின் சிறப்பு. எனவேதான் அதை யாராலும் அழிக்கவே முடியாது!*

*"இவ்வேதத்தை நாமே அருளினோம்; அதன் பாதுகாவலரும் நாமே" என இறைவன் கூறுகிறான். (திருக்குர்ஆன் 15:9)*

*பொய்மை என்றால் விரைவிலேயே அழிந்துவிடும். ஆனால் உண்மை கசப்பாக இருந்தாலும் என்றும் அழியாது. காலதாமதம் ஆனாலும் அது நிலைத்தே நிற்கும். அனைத்தையும் வென்றே தீரும்.*

## *முஹம்மத் இறைத்தூதரா?*

*முஹம்மத் தம்மை இறைத்தூதர் என பொய்யுரைத்துள்ளாரோ!*

*"இது மெய்யா, பொய்யா?" என இப்போது உன் உள்ளத்தில் ஐயம் எழலாம்.*

*உண்மையில் எழுகிறதா? இதை அறிவதற்கு முன்னதாக அவர்களின் வரலாற்றுச் சுருக்கத்தை சற்று அறிந்துகொள்!*

## வாழ்க்கைக் குறிப்பு

*மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு ஆன்மிகம், தத்துவம், அரசியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தலைவர்கள் பலர் தோன்றியுள்ளார்கள். அவ்வாறு தோன்றினவர்களில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) என அழைக்கப்படும் தலைவரும் ஒருவர். வரலாற்று ஆய்வாளர்களும், சமூகச் சிந்தனையாளர்களும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைத் தங்களின் ஆய்வுகளில் சிறப்பித்துக் குறிப்பிடத் தவறியதில்லை. இன்றைய உலகில் காணப்படும் 2000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒவ்வொரு துறையிலும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப் பங்குண்டு என்பதை அதன் துறையைச் சார்ந்தோர் தெரிந்தே இருக்கிறார்கள். ஆனால், இறைத்*

*தூதர் முஹம்மத்(ஸல்) தம்மை 'இறைவனின் தூதர்' என்றது தெளிவான ஆய்விற்கு எடுக்கப்படவில்லை. உண்மையில் இது பெரும் ஆய்விற்குரியதாகும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இறையியல் சார்ந்த வாழ்க்கையை ஆய்விற்குட்படுத்து வதற்கு முன்னர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை சுருக்கமாக அறிவதை அவசியம் எனக் கருதுகிறேன்.*

*இன்றைய சவூதி அரபியாவிலிருக்கும் மக்கா மாநகரில் கி.பி 570 வது ஆண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பிறந்தார்கள். அவர்கள் தம் தாயின் வயிற்றில் இருந்தபோதே தந்தையை இழந்தார்கள். பின்னர் அவர்கள் பிறந்ததும் தம் நாட்டு வழக்கப்படி கிராமத்திற்கு அனுப்பட்டார்கள். 'ஹலீமா ஸஅதிய்யா' என அழைக்கப்பட்ட பெண்மணியிடம் பாலருந்தி வளர்ந்தார்கள்.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தங்களின் ஆறாவது வயதில் தாயையும் இழந்தார்கள். பின்னர் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் மேற்பார்வையில் வளர்ந்தார்கள். அப்போது அவர் களுக்கு வயது எட்டு. அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களும் மரணப்பிடிக்குள்ளானார்கள். ஆதரவற்ற நிலையில் இருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் அவர்கள் தம் பொறுப்பில் எடுத்தார்கள்.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு எழுத்தறிவோ படிப்பறிவோ சிறிதும் போதிக்கப்படவில்லை. இருப்பினும் அவர்கள் தங்களின் புத்தி சாதுர்யத்தால் ஒழுக்கத்தில் மிகவும் சிறந்து நேர்மைமிக்க வணிகராகத் திகழ்ந்தார்கள். அவர்களால் யாரும் எப்போதும் ஏமாறவில்லை. அவர்களின் நேர்மை மற்றும் உயர்ந்த பண்பு ஆகியவை அந்த அளவிற்கு உயர்ந்து இருந்தன.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தங்களின் இருபத்தி ஐந்தாவது வயதில் நாற்பது வயது நிரம்பிய விதவைப் பெண்மணி அன்னை கதீஜா(ரலி) அவர்களை மணந்தார்கள்.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் வணிகத் திறமையால் பெரும் செல்வந்தராகவும், தம் மக்களுக்கிடையில், கண்ணிய மிக்கவராகவும், அன்றைய அரபு மக்கள் பிரித்துப் பார்த்த குலத்தின் அடிப்படையில் உயர் குலத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார்கள். 'அல் அமீன்' நம்பிக்கைக்குரியவர், 'அஸ் ஸாதிக்' உண்மையாளர் என்னும் உயர்வான பெயர்களையும் பெற்று இருந்தார்கள். மக்கள் அவர்களை மதிப்பதிலும், கண்ணியப்படுத்தியதிலும் சிறிதும் குறைவைத்ததில்லை.*

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) நாற்பது வயதையடைந்தபோது அவர்களுக்கு இறைவன் தன் தூதை அனுப்பினான். அவர்களுக்கு அது என்னவென்று புரியாமல் பயத்தை ஏற்படுத்தியது. அப்போது அவர்களின் மனைவி கதீஜா(ரலி) அவர்கள் தம் சிறிய தந்தையான வரக்கா இப்னு நவ்ஃபல் என்பவரிடம் அவர்களை அழைத்துச் சென்றார்கள். தம் கணவருக்கு நிகழ்ந்தவற்றைக் குறித்து அவரிடம் கூறி விளக்கம் கேட்டார்கள். வேதங்களில் ஞானம் பெற்றிருந்த வரக்கா இப்னு நவ்ஃபல் எனும் அறிஞர், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம், 'அவர்கள் இறைவனின் தூதர்' எனும் செய்தியைச் சொல்லி; உண்மை நிலையை அறியச் செய்கிறார். அதன் பின்னரே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களிடம், "நான் இறைவனின் தூதர், படைத்தவனை மட்டும் வணங்க வேண்டும்; படைப் பினங்களை வணங்கக்கூடாது. இச்செய்தியை போதிப்பதற் காகவே இறைவன் என்னைத் தூதராக அனுப்பியுள்ளான்" எனும் செய்தியைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

அவர்கள் சொன்ன அச்செய்தி சாதாரணமான செய்தியன்று. சிலைகளைக் கடவுளர்கள் என வணங்கிய மக்களனைவரின் ஆழமான நம்பிக்கைக்கும் எதிரான செய்தி அது. மண்ணையும், கல்லையும், மரத்தையும், மிருகங்களையும், பறவைகளையும் மொத்தத்தில் படைப்பினங்களில் எதையும் வணங்கக் கூடாது எனும் செய்தி அது. மனிதனுக்கு மனிதன் அடிமையன்று, அனை வரும் சமம் எனும் செய்தி அது. இறைவன் மட்டுமே உயர்ந்தவன். மனிதர்களில் யாரும் யாரையும்விட உயர்ந்துவிட முடியாது எனும் செய்தி அது. சுருக்கமாகச் சொன்னால் அன்றைய மக்களின் கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிரான மாறுபட்ட செய்தி அது.

இதைச் செவியுற்ற மக்கள் சற்றும் சிந்தனையின்றி இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மீது கோபமுற்று கொதித்து எழுந்தார்கள்; வசைபாடினார்கள். ஆனால், அதற்கெல்லாம் அஞ்சாது இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) இறைவழியில் சத்தியப் பிரச்சாரத்தை முன்வைத்தார்கள். எதிர்ப்புகளைக் கண்டு துவண்டு விடாது தொடர்ந்து இறைச்செய்தியை மக்களுக்குச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அன்று வரை உயர்த்திப் பாராட்டிய மக்கள் வசைபாடுதலையும், துன்புறுத்தலையும் வாடிக்கையாக்கினார்கள். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்களையும் மிகக் கடுமையாகக் கொடுமைப்

படுத்தினார்கள். இக்கொடுமைகளுக்குக்கிடையில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பதிமூன்று ஆண்டு காலம் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தயக்கமின்றி மக்களிடம் கூறிவந்தார்கள்.

முஹம்மத்(ஸல்) அவர்களை மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள்; அவர்களையும், அவர்களின் தோழர்களையும் கொடுமையாகத் துன்புறுத்தினார்கள். எனவே, இறைவனின் வழிகாட்டுதலுக்கேற்ப இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் தோழர்களுடன் மதீனா எனும் தேசம் நோக்கிப் புலம்பெயர்ந்தார்கள். அங்கு அவர்கள் இறைக் கட்டளையின் அடிப்படையிலான 'இஸ்லாமிய அரசு' ஒன்றை நிறுவி, அதன்படி ஆட்சியமைத்துச் செயல்பட்டுவந்தார்கள். மதீனா தேசத்தில் மனித சமுதாயத்திற்கு தேவையான அனைத்துச் சட்டங் களையும் இறைவனிடமிருந்து பெற்றுக் கொடுத்தவர்களாகத் அறுபத்து மூன்றாவது வயதில் காலமானார்கள். "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்." (நாம் அனைவரும் இறைவனிடமிருந்தே வந்துள்ளோம் மீண்டும் அவனிடமே நாம் அனைவரும் செல்வோம்.)

முஹம்மத்(ஸல்) இறைத்தூதரா என்பதைக் காண்போமா?

முஹம்மத்(ஸல்) இறைத்தூதர் என்பதை இறைவேதம் குர்ஆன் மனித குலத்திற்குத் தெரிவிக்கிறது.

முஹம்மத் உங்களில் எந்த ஆணுக்கும் தந்தையாய் இருக்கவில்லை. அவரோ இறைத்தூதர்; இறைத்தூதர்களில் இறுதியானவர். மேலும், இறைவன் ஒவ்வொரு பொருள் குறித்தும் நன்கறிந்தவன். (திருக்குர்ஆன் 33:40)

பிறந்த நாள் முதல் என்றுமே முஹம்மத்(ஸல்) பொய்யுரைத்தார் என்ற சரித்திரமே இல்லை. பிறருடைய பொருட்களின் மீது ஆசை கொண்டதே இல்லை. ஒருபோதும் யாருக்கும் தீங்கிழைத்ததே இல்லை. அரபு நாடு முழுவதிலும் உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் என்பதைத் தவிர வேறு வார்த்தைகளில் யாரும் அவரை அழைத்ததே இல்லை; வாக்கு மீறியதுமில்லை; வம்புக்குப் போனது மில்லை. அவர் தன்னை இறைத்தூதர் என்றதால் அம்மக்கள் கொடுத்தார்கள் தொல்லை; கொட்டினார்கள் வழியில் முள்ளை; அதற்கும் கோபம் கொண்டதில்லை; அவர்களின் மீது எறிந்தார்கள் கல்லை; அப்போதும் அவர்களை அழிக்க விரும்பியதில்லை. நான்கில் எதுவோ நாற்பதிலும் அதுவே! ஆறில் எதுவோ அறுபதிலும் அதுவே! இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின்

*வரலாற்றை ஆயிரமாயிரம் முறை புரட்டினாலும் நீ காண்பதும் அதுவே. அப்படிப்பட்ட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பொய் யுரைப்பார்களா? அதுவும் நாற்பது ஆண்டுகளாகப் பொய்யுரைக் காமல் நாற்பத்தி ஒன்றாம் ஆண்டு பொய்யுரைக்கக் கூடுமா? அப்படி அவர்கள் அது வரையில் பொய்யுரைக்காமல் அப்போது மட்டும் பொய்யுரைக்க வேண்டுமென்றால் ஒன்று அழகிய கன்னியரை அடைய வேண்டுமென்ற எண்ணம் எழுந்திருக்க வேண்டும். இல்லையாயின் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்திருக்க வேண்டும். அதுவுமில்லையாயின் தாம் ஓர் அரசராக வேண்டுமென்ற அவா பெருகி இருக்க வேண்டும். ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் இம்மூன்று ஆசைகளில் ஒன்றுகூட அறவே இருந்ததில்லையே!*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஹம்ஸா(ரலி) பெரும் வீரர். அவர் இஸ்லாமை ஏற்றார். அதன் பின்னர் குரைஷியர்களுக்கு பெரும் பயம் ஏற்பட்டது. இனிமேல் முஹம்மத்(ஸல்) அவர்களை மிரட்டியோ, அதட்டியோ எதையும் சாதிக்கமுடியாது என எண்ணிய அவர்கள் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் தந்தையின் இன்னொரு சகோதரரான உத்பாவை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் அனுப்பி ஆசை வார்த்தை களைக் கூறி ஏகத்துவப் பிரச்சாரத்தைத் தடைசெய்ய முயன்றார்கள்.*

*உத்பா முஹம்மத்(ஸல்) அவர்களிடம் வந்து அமர்ந்து "என் அன்புச் சகோதரரின் புதல்வரே! தாங்கள் ஏன் எங்கள் மத்தியில் வெறுப் பூட்டும் அளவிற்கு நடந்துகொள்கிறீர்கள்? எங்கள் ஒற்றுமையைக் குலைத்துவிட்டீர்களே? எங்கள் தெய்வங்களைக் குறைகூறுகிறீர்களே, எங்களில் திறமை வாய்ந்த சமூக அறிவாளிகளைப் புத்தியற்றவர் களாக்கிவிட்டீர்களே, எனினும் சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் உம்மிடம் வந்துள்ளேன். அதை நான் கூறட்டுமா?" எனக் கேட்டார்.*

*அதற்கு முஹம்மத்(ஸல்) "தாங்கள் கொண்டு வந்துள்ள செய்தியைக் கூறுங்கள்" என்றார்கள்.*

*"முஹம்மதே! மக்களுக்கிடையில் நீங்கள் பிளவை ஏற்படுத்துவதால் யாதொரு பயனுமில்லை! நீங்கள் இந்த அரபு நாட்டிற்கே தலைவராக விரும்பினால் அதை இப்போதே கூறிவிடுங்கள். இந்நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் உங்கள் கையில்*

ஒப்படைத்துவிடுகிறோம். அல்லது அழகிய மங்கையர்களின் மீது உங்களுக்கு ஆசை இருப்பின் அதையும் கூறிவிடுங்கள். அரபு நாட்டிலுள்ள அனைத்து அழகிய மங்கையரையும் உங்கள் காலடியில் பணியச் செய்கிறோம். அல்லது அரபு நாட்டில் உள்ள செல்வச் சீமான்களை எல்லாம்விட பெரும் செல்வச் சீமானாக விளங்க விரும்புகிறீர்களென்றால் அதையும் கூறிவிடுங்கள். எங்களின் செல்வம் அனைத்தையும் தங்களின் முன்பு கொட்டிவிடுகிறோம். ஆனால் தாங்கள் இப்பிரச்சாரத்தை நிறுத்திவிட வேண்டும்'' எனக் கூறினார்.

இதைக் கேட்ட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்), "என் ஒரு கையில் நிலவையும் மற்றொரு கையில் கதிரவனையும் கொண்டுவந்து வைத்தாலும் என் ஏகத்துவக் கொள்கையை விடவே மாட்டேன்" எனக்கூறி திருக்குர்ஆனில் இடம்பெறும் 41ஆம் அத்தியாயத்தில் உள்ள சில வசனங்களை ஓதிக்காண்பித்து, ''உத்பாவே! நீர் எவ்வளவு கருத்து மிகுந்த, உண்மையான வார்த்தைகளைக் கேட்டுவிட்டீர். இனிமேலாவது நன்கு சிந்தித்துக் கொள்வீர் எனக் கருதுகிறேன்'' எனக் கூறி முடித்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மறுமொழியையும், இறைவேத வசனங்களையும் கேட்ட உத்பா தோல்வியடைந்து தன் குலத்தார்களிடம் திரும்பிச் சென்றார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம்மை இறைத்தூதர் என பொய் கூறுவதாக இருந்தால், இவற்றில் எதையேனும் ஒன்றை அடைவதற்காகத்தான் இருக்கவேண்டும். ஆனால், அவற்றில் எதுவுமே தனக்குத் தேவை இல்லை. ஓர் இறைக்கொள்கை மட்டுமே தேவை என்பதைத் தெளிவுபடுத்தி மற்ற அனைத்தையும் துச்சமாகக் கருதினார்கள். இப்பண்புள்ள அவர்கள் எதற்காக பொய்யுரைக்க வேண்டும்? சற்று எண்ணிப்பார் மனிதா!

ஒரு மனிதனிடம் பெண், பொன், ஆட்சியதிகாரம் மூன்றையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, அவனுடைய பெற்றோரை, மனைவி, மக்களை எல்லோரையும் கொன்றுவிடு. அப்போது தான் இம்மூன்றும் உனக்கு கிடைக்கும் எனக்கூறினால் பாதமான அச்செயல்களை அவன் செய்துவிடுவான்! ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அப்பெரும் செல்வங்களுக்காக நான் ஏகத்துவப் பிரச்சாரத்தை நிறுத்திவிடுகிறேன் எனக் கூறத் தயாராக இல்லை. முஹம்மத் இறைத்தூதர் என்பதற்கு இதை விடப் பெரும் சான்று உமக்குத் தேவையா?

## *வானவர்களே தூதர்களாக வந்தாலென்ன?*

*நீ வாழும் உலகில் எண்ணற்ற படைப்பினங்கள் உள்ளன. சில படைப் பினங்களை நீ நன்றாகப் பார்க்கிறாய். சில படைப்பினங்களை நீ பார்த்தாலும் உன்னால் அவற்றைத் தொடமுடிவதில்லை. உதாரணத்திற்கு ஒளி. சில படைப்பினங்களை நீ பார்க்கவும் முடியாது, தொடவும் முடியாது ஆனால் உன்னால் அவற்றை உணரமுடியும். உதாரணம் காற்று. சில படைப்பினங்களை உன்னால் பார்க்க, தொட மட்டுமல்லாமல், உணரவும் முடியாது. உன் அறிவுத்திறனைக் கொண்டு அறியத்தான் முடியும். அப்படிப் பட்ட படைப்பினங்களில் உள்ளவர்களில் வானவர்களும் அடங்குவர். முஹம்மத்(ஸல்) இறைவனை நேரடியாகப் பார்த்துப் பேசி திருக்குர்ஆனைப் பெற்றுவரவில்லை. வானவர்கள் என அழைக்கப் படும். இவர்களின் மூலமாகத்தான் இறைவன் தன் கட்டளைகளை யும், உபதேசங்களையும் அனுப்பினான்.*

*வானவர்களையே இறைவன் தன் தூதர்களாக மக்களிடம் அனுப்பினால் என்ன என்று கேட்கிறாயா?*

*உன் ஐயம் நியாயமானதே.*

*வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள், அவர்கள் உண்ணு வதில்லை; உறங்குவதில்லை; பருகுவதுமில்லை; அவர்களுக்கு மனைவி மக்களென்ற பிரச்சினையுமில்லை. அவர்கள் அனைவரும் இறைவனைத் துதிப்பதைத் தவிர வேறு ஒன்றையும் செய்வதுமில்லை. அப்படிப்பட்டவர்கள் உன்னிடம் வந்து, மனிதா! நீ இப்படித் தான் வாழ வேண்டும் எனச் செய்து காட்டினால் நீ அவர்களை நோக்கி என்ன கூறுவாய்?*

*“வானவர்களே! நீங்கள் இறைவனின் கட்டளைப்படி நடப்பதில் உங்களுக்கு எவ்விதச் சிரமமுமில்லை. ஏனெனில் உங்களுக்கு உலகில் எவ்வித தேவையுமில்லை. ஆனால், நாங்களோ எங்களின் வயிற்றையும், மனைவி மக்களையும் பார்க்க வேண்டியதாய் இருக்கிறது. எனவே, அது எங்களுக்குச் சாத்தியமாகாது. அதை நீங்கள் மட்டும் செய்துகொள்ளுங்கள்” என்றல்லவா கூறுவாய்!*

*எனவேதான், இறைவன் மனிதர்களிலே ஒருவரை தன் தூதராகத் தேர்ந்தெடுத்து, அவனுடைய கட்டளைகளை அவரும் செய்து காட்டி பிறருக்கும் கற்பிக்குமாறு அனுப்பியுள்ளான்.*

## *வழி தவறி விடாதே!*

*மனிதா! நீ மனிதனாகவே மதிக்கப்பட வேண்டும். நீ மட்டுமின்றி மனித இனமே மதிப்படைய வேண்டும். எறும்பு போல கூடி கரும்பாய் இனித்து சமத்துவம் என்னும் கொடியை உலகமெங்கும் பறக்கவிடவேண்டும். அறிவிலிகள் அறிவாளிகளாக மாறவேண்டும்.*

*என் தலையின் காவலன் மீது ஆணை! உலகில் எப்படிப்பட்ட இயக்கங்களில் நீ மட்டுமல்ல, உலகமே பங்கு கொண்டு செயல் பட்டாலும், அதற்காக உயிரையும் தியாகம் செய்தாலும் இஸ்லாமிய மார்க்கம் வலியுறுத்துபவற்றை நிலைநிறுத்தினாலே தவிர மனித குலத்திற்கான முழுமையான தீர்வைக் காணமுடியாது.*

*எனவே, மனிதா! இஸ்லாமியநெறியை உன் நெஞ்சாரத் தழுவிடு! அதன்படியே செயலாற்றிடு. தீயோரின் மாயவலையில் விழுந்து விடாதே! உன்னை நீயே அழித்துக் கொள்ளாதே!*

## உண்மையே வெல்லும்...

*முட்டையின் வெள்ளைக்கருவும், மஞ்சள் கருவும் பார்ப்பதற்குப் பெரியதாக உள்ளன. ஆனால், அவற்றைவிட உண்மையில் பலம் வாய்ந்தது குண்டூசியின் தலையளவில் முட்டையின் நடுவிலுள்ள உயிரணுதான். நாளடைவில் அந்த உயிரணு வெள்ளை, மஞ்சள் ஆகிய இரண்டு கருக்களையும் தன்னுள்ளாக்கிச் சிறுகச்சிறுகப் பெரிதாகி, முழுமைபெற்று தடைகளை உடைத்து உயிர்பெற்று எழுகிறது. அவ்வாறே இஸ்லாம் நாளுக்கு நாள் வளர்ந்து, தடைகளை உடைத்து, மனித இனத்திற்கு ஒளிவிளக்காய் வழிகாட்டி அனைவரும் வியக்கும் சீரிய மார்க்கமாகத் திகழும் என்பதில் துளியும் ஐயமில்லை.*

*சத்தியம் வெல்லும், அசத்தியம் அழியும். அசத்தியம் ஒரு நாள் அழிந்து போகக் கூடியதே! என்று (இறைத்தூதர் முஹம்மதே) நீர் கூறும்! (திருக்குர்ஆன் 17:8)*

*மனிதா! நீ நேர்வழியை அடைவதற்கும், வெற்றிபெறுவதற்கும் என் பிரார்த்தனைகள்!*

*******

தலையை உயர்த்து! வானத்தைப் பார்!

அதில் ஏதாவது பிளவைக் காண்கிறாயா?

அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது?

அப்படியே பார்வையை கீழ்நோக்கித் திருப்பு!

எவ்வளவு பொருட்களைச் சுமந்து சுழல்கிறது, பூமி!

அது எங்ஙனம் விரிக்கப்பட்டுள்ளது,

உனக்கு முன்னே பார்!

ஆம்! ஆங்காங்கே நெட்டை குட்டையாக மலைகள் உள்ளன.

இவை யாவும் எங்ஙனம் பிடிப்பாக நடப்பட்டுள்ளன என்பது உன் சிந்தனைக்கு எட்டவில்லையா?

சிந்திப்பாய் சிறப்படைவாய்!

உலகிற்கே ஒளி தரும் சூரியனும், நிலவும் ஒன்றையொன்று நெருங்கிக் கொள்ளவில்லை, நூலளவும் தடம் மாறாமல் அவை தம் வரையறைக்குள்ளே சீராகச் சுழல்கின்றன! அவற்றின் ஒத்துழைப் பின்றி மரம், செடி, கொடி போன்ற தாவரங்கள் யாவும் வளராது என்பதை நீ அறிவாய்! சில காலம் அவை மறைக்கப்பட்டால் உலகிலுள்ள பெரும் பான்மையான உயிரினங்கள்


BUY THIS ORIGINAL COPY; KILL PIRACY
PUBLICATIONS

**ZERO PUBLICATIONS**
19, Vinayagamoorthi Street,
Sathamangalam, Madurai - 625 020. Tamil Nadu, India.
E-mail: zeropublications@gmail.com